**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையிம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக்

கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு வகுப்பிற்குரிய சகல சொத்துக்களும் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 | சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக விரைவாக உத்தியோகத்தர்களின் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சகல காணி மற்றும் கட்டிடங்களையும் |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த கிரயம் ரூபா 73,583,056 தொகையான காணி மற்றும் கட்டிடங்களில் ரூபா 10,447,264 கிரயமான காணி மற்றும் கட்டிடங்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி மற்றும் கட்டிடங்களின் ஒரு பகுதி அதன் கிரயத்திலும் மேலும் ஒரு பகுதி அதன் மீள்மதிப்பீட்டு பெறுமதியிலும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சேவையை பெற்றுக் கொள்ளும் வகையில் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. காணப்படுகின்ற கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாகக் கொண்டு மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தமை மற்றும் அந்த திணைக்களத்தில் இருந்து சேவை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் விரைவாக மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கணக்குகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 184,019,059 கிரயமான சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்து சரியான தேறக்கூடிய பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது இலங்கை பொது கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 மற்றும் 7 இன் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் ஓய்வூதிய நலன் பொறுப்புக்களின் கழிவு திட்டத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படாதிருந்ததுடன், அந்த பொறுப்புக்கள் ரூபா 61,566,421 ஆக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தவறினை திருத்தி 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 96 ஆம் பந்தியின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கற்பனைச் சொத்தாக இனங்காணப்பட்ட ரூபா 928,085 தொகையான மென்பொருட்களின் பயன்தரக் கூடிய ஆயுட் காலம் மதிப்பீடு செய்யப்பட்டு வருடாந்த பெறுமானத் தேய்வு பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தவறினை திருத்தி 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நவதிகன்த புனர்வாழ்வு நிலையத்தில் தூதுவர் ஒருவரினால் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது இந்த தவறு திருத்தப்படும். | நன்கொடைகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 761.85 | 769.29 | 7.44 | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை விரைவாக கண்டறிந்து எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை விரைவாக கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு அடுத்து வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கங்கள் | 258.04 | 266.79 | 8.75 | வேறுபாடுகளுக்குரிய காரணங்கள் விரைவாக கண்டறிந்து எதிர்காலத்தில் கணக்காய்விற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளுக்குரிய காரணங்களை விரைவாக கண்டறிந்து தேவையான சீராக்கங்களை மேற்கொண்டு அடுத்து வரும் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.5.4 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை | தொங்கலாக காணப்பட்ட காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | வருடம் | | |
| தொங்கல் கணக்குகள் | 480,900 | 07 | 2021 மார்ச் 03 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் அந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய மீதிகள் தீர்க்கப்படுகின்றது. | தொங்கல் கணக்குகளின் மீதி கூடியவிரைவில் தீர்த்து வைக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்கில் காணப்பட்ட வரவு மீதி ரூபா 1,782,060 தொகை 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அசைவுறாது காணப்பட்டதுடன், அந்த மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பண கணக்கு மீதிகள் மிகவும் பழைய மீதியாக இருந்தமையினால் இனங்காணப்பட முடியாதிருந்ததுடன், 2021 மார்ச் 03 ஆம் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் அந்த மீதியினை தீர்த்து வைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய மீதிகள் தீர்த்து வைக்கப்படுகின்றது. | முற்பண கணக்கு மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான நபர்களின் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தின் 7 ஆம் பிரிவு. | சமநிலைப்படுத்தும் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான நபர்களின் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தை திருத்ததுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நடைமுறை பிரச்சினைகளின் காரணமாக சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் சமநிலைப்படுத்தும் சபை நியமிக்கப்படாமை மற்றும் அந்த பிரச்சினைகளை மாற்றியமைக்கும் வகையில் திருத்தப்பட்ட சட்டத்தின் வரைவு தயாரிக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக நீதி அமைச்சிற்கு 2021 மே 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சமநிலைப்படுத்தும் சபை நியமிக்கப்படாதிருந்தமையினால் புனர் வாழ்வுக்கு உட்படுத்தப்படுகின்ற சேவை பெறுனர்களுக்கு ஔடதங்களுக்கு அடிமையான மட்டம், மீண்டும் அனுப்புவதற்கான முக்கியத்துவம், உடல் ரீதியான மற்றும் உளரீதியான நிலைமைகள், குடும்பங்களின் பின்புலம் மற்றும் சமூகத்தின் பின்புலம் போன்ற மிகவும் முக்கியமான விடயங்கள் தொடர்பாக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாமையினால் புனர் வாழ்வு செயற்பாடுகளில் இருந்து பெறக் கூடியதாக இருந்த ஆகக் கூடிய பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்காக சமநிலைப்படுத்தும் சபை கூடிய விரைவில் நியமிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 381 | அலுவலக வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்காக திறைசேரியில் இருந்து கோரப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கை ஆரம்பிப்பதற்காக அவ்வாறான கோரிக்கையொன்று பெறப்பட்டிருக்கவில்லை. | மதுபான பயன்பாட்டினால் அடிமையானவர்களின் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக பல்வேறு தரப்பினரிடம் இருந்து நிதி உதவிகள் கிடைத்திருந்தமையால் அவற்றை வைப்பிலிடுவதற்காக தனிப்பட்ட வங்கிக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(ஏ) | வங்கி இணக்கக் கூற்று தயாரித்தல் மற்றும் காசேட்டினைப் பேணிச் செல்லல் என்பன சுயாதீன உத்தியோகத்தர்கள் இருவரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்த இரண்டு செயற்பாடுகளும் ஒரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் தவறை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான உள்ளக கட்டுபாடொன்றை ஏற்படுத்தும் வகையில் வேலை கையளித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,697,277 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 38,259,643 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 25,562,366 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. அந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் மானியம் ரூபா 26,757,210 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 மே 12 ஆம் திகதிய 1653/19 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பிரகாரம் யாராவதொரு நபரினால் ஔடதங்களுக்கு அடிமையான நபர்களை கண்காணித்தல் மற்றும் புனர்வாழ்வுகளுக்காக தனியார் சிகிச்சை நிலையமொன்றை பேணிச் செல்வதாயின் அவரினால் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக இருந்த போதிலும், 2021 யூலை மாதம் வரையில் அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாகியிருந்த 14 தனியார் சிகிச்சை நிலையங்கள் காணப்பட்டன. 2019, 2020 மற்றும் 2021 யூலை மாதம் வரை அனுமதிப் பத்திரம் விநியோகிகப்பட்டதால் கிடைத்த வருமானம் முறையே ரூபா 17,000 , ரூபா 13,500 மற்றும் 2,000 ஆக இருந்தமையால் அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்தல் படிப்படியாக குறைவடைந்தமையும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக சரியான ஒழுங்குவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . | தனியார் சிகிச்சை நிலையத்தை ஒழுங்கமைக்கும் போது ஏற்படுகின்ற நடைமுறை ரீதியான பிரச்சினைகளை இனங்கண்டு பொருத்தமான பிராகரம் 2007 இன் 54 ஆம் இலக்க ஔடதங்களுக்கு அடிமையான நபர்களின் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு) தொடர்பான சட்டத்தை திருத்ததுவதற்காக அமைச்சரவை குறிப்பொன்று தயாரிக்கப்பட்டு நீதி அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தனியார் சிகிச்சை நிலையங்களின் ஒழுங்குவிதிகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஔடதங்களுக்கு அடிமையான நபர்களை கண்காணித்தல் மற்றும் புனர்வாழ்வுகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள 26 தனியார் சிகிச்சை | 03 புலனாய்வு உத்தியோகத்தர்களின் பதவிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது டன், அதில் ஒரு | சரியான ஆய்வின் பின்னர் தேவையான புலனாய்வு உத்தியோகத்தர்களி ன் அளவை |

| | | | |
|---|---|---|---|
| | நிலையங்கள் சபையில் நேரடிக் கண்காணிப்பின் கீழ் காணப்படுகின்ற போதும் அந்த சகல சிகிச்சை நிலையங்களையும் புலனாய்வு செய்வதற்காக மூன்று புலனாய்வு உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சிகிச்சை மற்றும் புலனாய்வுகளில் இரண்டு பதவிகள் காலம் முழுவதும் வெற்றிடமாக காணப்பட்டன. சரியான பிரகாரம் போதியளவான பயிற்சி பதவியணியினர் மூலம் சரியான திட்டத்தின் பிரகாரம் புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமான சிகிச்சை நிலையங்களின் குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் அதிக அளவில் காணப்படுகின்றமை புலனாய்வு அறிக்கைகளை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. | புலனாய்வு உத்தியோகத்தர் 2020 யூலை 15 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றிருந்தமை மற்றும் அந்த வெற்றிடங்களை விரைவாக நிரப்ப வேண்டியிருந்தமை, எதிர்காலத்தில் தேவையான பதவியணியினரை அங்கீகரித்து கொள்ள வேண்டியிருந்தமை மற்றும் தற்போது காணப்படுகின்ற உத்தியோகத்தரின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு முறையான திட்டமொன்றின் பிரகாரம் தனியார் சிகிச்சை நிலையங்களை அவதானிப்பதற்காக மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் சேவையில் ஈடுபடும் 22 கள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | தீர்மானித்து பதவியணியினர் எண்ணிக்கையில் உள்ளடக்குவதற்காக அங்கீகாரம் பெற்றப்பட வேண்டும். |
| (இ) | நீண்ட காலமாக மதுபான பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்த நபர்களுக்கு மீண்டும் மீண்டும் சிகிச்சை அளித்தல் மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் சேவையினை பெற்றுக் கொள்ளல் முக்கியமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், சபைக்குரிய நிட்டம்புவ, கண்டி, காலி மற்றும் தலங்கம போன்ற சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் சிகிச்சைக் காலத்தை பூர்த்தி செய்த 157 சேவை நலன் பெறுனர்கள் 2020 ஆம் ஆண்டில் மீண்டும் சிகிச்சை பெறுவதற்காக நிலையங்களுக்கு வருகை தந்திருந்தனர். | சேவை நலனாளிகள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பீட்டு முறைமையொன்றை எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பின்தொடர் செயற்பாடுகளை மிகவும் சிறந்த முறையில் அமுல்படுத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்பாடற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி ரூபா 4,027,518 தொகை செலவில் முப்பது வருட குத்தகை அடிப்படையில் ஹோமாகமையில் அமைந்துள்ள 40 பேர்ச் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும், 2021 செப்டம்பர் 01 ஆம் திகதி வரையிலும் அதனை ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தாமல் பயனற்று காணப்பட்டது. | நிதி ஏற்பாடு கிடைக்கப் பெறாமையின் காரணமாக எதிர்பார்த்த பணிகளை இதுவரை நிறைவேற்ற முடியாதிருந்ததுடன், இதற்கான தீர்வாக முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடம் (Pre Fab Building) பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததாக பாதுகாப்பு அமைச்சினால் 2021 பெப்ரவரி 08 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2021 யூலை 01 ஆம் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 33 சதவீதத்திற்கு சமமான 125 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 67 சதவீதத்திற்கு சமமான பதவியணியினர்களால் சபையின் நடவடிக்கைகளை பேணிச் செல்வதன் மூலம், சபையின் தேவையின் பிரகாரம் இனங்காணப்படாமல் தயாரிக்கப்பட்ட தேவையற்ற பதவியணியினருக்காக அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதவியணியினரின் எண்ணிக்கையை மீண்டும் மீளாய்வு செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சுட்டிக்காட்டப்படுள்ள குறைபாடுகளை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான ஆய்வின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பொருத்தமான பிரகாரம் திருத்துதல் வேண்டும். |
| (ஆ) | பணிப்பாளர் (நிர்வாகம்) பணிப்பாளர் (ஆராய்ச்சி), | 2020 ஒக்டோபர் 23 ஆம் திகதி செய்திப் | இவ்வாறான அத்தியவசிய |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் (சிகிச்சை, புனர்வாழ்வு மற்றும் வெளி சேவைகள்) போன்ற பதவிகள் 2013 ஆம் ஆண்டு முதலும், பணிப்பாளர் நாயகம் பதவி 2017 ஆம் ஆண்டு முதலும் வெற்றிடமாக காணப்பட்டன. சபையில் உயர் மட்ட முகாமையாளர் பதவிகள் நீண்ட காலம் முதல் வெற்றிடமாக காணப்பட்டமை, சபை ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கத்தை சரியானதாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தமைக்காக நேரடியாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பத்திரிகை அறிவித்தல் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதும், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் அடிப்படை தகைமைகளுடன் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதிருந்ததுடன் இந்த வெற்றிடப் பதவிகளுக்காக பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | பதவிகளுக்காக தகைமைகளுடன் உள்ள உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு முடியுமான சகல முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும். |